# கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள்!

## முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் ஆய்வுக் கூட்டம்!



தலைமைச் செயலகத்தில் நேற்று (11.01.2024), இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில், கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுகள் – 2023 போட்டியை தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 4 மாவட்டங்களில் வரும் ஜனவரி 19 முதல் 31–ந் தேதி வரை நடத்துவது தொடர்பான நிர்வாக குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இந்திய விளையாட்டு ஆணையத்தின் துணை இயக்குநர் ஏக்தா விஷ்னோய் மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள், அரசு செயலாளர்கள், காவல் துறை உயர் அலுவலர்கள் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்னை, ஜன. 12 -

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 6வது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023 நடத்துவதற்காக முன்னேற்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளும் நிர்வாகக் குழுவினரிடம் ஆலோசனை மேற்கொண்டார். இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு, தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, முன்னிலை வகித்தார். தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய இடங்களில் 2024 ஜனவரி 19 முதல் 31 வரை விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளன. கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் மொத்தம் 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலிருந்து, 18 வயதுக்கு உட்பட்ட பிரிவில் சுமார் 6000க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர் வீராங்கனைகளும் 1600க்கும் மேற்பட்ட பயிற்சியாளர்களும் பங்கேற்க உள்ளனர். மேலும், 1000க்கும் மேற்பட்ட நடுவர்கள் மற்றும் 1200க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

இந்த ஆண்டு 27 பிரிவுகளில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பம் டெமோ விளையாட்டுகளில் (Demo Sports) இடம்பெறுகிறது.

போட்டி நடைபெறும் இடங்கள் & அட்டவணை, உள்கட்டமைப்பு நிலை, வரவேற்பு/நெறிமுறை, போக்குவரத்து, துவக்க & நிறைவு விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் நகரங்கள், குடிநீர் வழங்கல் & சுகாதார வசதி, போட்டி நடைபெறும் நாளுக்கான நிகழ்வு மேலாண்மை, ஊடகம் & பத்திரிகை, விளம்பரப்படுத்துதல், போட்டி நடத்தும் மாநிலம்/மாவட்டத்தை முடுக்கிவிடுதல், பாதுகாப்பு ஏற்பாடுகள், பரிசு விநியோகம், மருத்துவச் சேவைகள், தங்குமிடம், சுகாதாரம் & உணவு வழங்குதல், விளையாட்டு மைதானங்களுக்கான நிர்வாகக் கட்டமைப்பு, மேடை ஏற்பாடுகள், மின்சார விநியோக வசதி, முக்கியச் சாலைகள் & சாலைத் தளவாடங்கள், இந்திய அரசு/மாநில அரசு ஒருங்கிணைப்பு, மாநில ஒருங்கிணைப்பு & கட்டுப்பாட்டு அறை, அங்கீகார அட்டைகள், தொழில்நுட்பம் & தகவல் தொழில்நுட்பச் சேவைகள், பார்வையாளர்களுக்கான அடிப்படை வசதிகள், பண்பாட்டுப் பொழுதுப் போக்கு நிகழ்ச்சிகள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, இந்திய விளையாட்டு ஆணையத்தின் துணை இயக்குநர் ஏக்தா விஷ்னோய், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள், அரசுச் செயலாளர்கள், காவல் துறை உயர் அலுவலர்கள், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை தமிழ்நாடு அரசின் 'அயலகத் தமிழர் தினம் 2024'ல் பங்கேற்பதற்காக சென்னைக்கு வருகை தந்திருக்கும் சிங்கப்பூர் நாட்டின் உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் கா.சண்முகம் அவர்கள் தலைமைச் செயலகத்தில் சந்தித்து பேசினார். அதுபோது இருவரும் தமிழ்நாட்டிற்கும் சிங்கப்பூருக்கும் இடையே உள்ள நீண்ட நெடிய பண்பாடு மற்றும் கலாச்சார உறவுகளையும் அவற்றை இன்னும் வலுப்படுத்துவதற்கான முயற்சிகளையும் பற்றி பல்வேறு கருத்துகளை பரிமாறிக்கொண்டனர்.

### வட்டச் செயலாளர் அ.மோசஸ் தலைமை!

# மதுரவாயல் 151 -வது வட்டத்தில் பொங்கல் விழா!

## காரம்பாக்கம் கணபதி நல உதவிகள் வழங்குகிறார்!

*சென்னை, ஜன. 12-*

*மதுரவாயல் தெற்குப் பகுதி 151 -வது வட்டக் கழகம் சார்பில் வட்டச் செயலாளர் அ.மோசஸ் ஏற்பாட்டில் 3000 பேருக்கு நல உதவிகளை பகுதிச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான காரம்பாக்கம் கணபதி வழங்குகிறார்.*

*சென்னை தெற்கு மாவட்டம். மதுரவாயல் தெற்கு பகுதி 151வது வட்ட செயலாளர் அ.மோசஸ் ஏற்பாட்டில் இன்று (12.1.24 வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு வளசரவாக்கம் எஸ்.வி.எஸ். நகரில் பொங்கல் திருநாளை முன்னிட்டு 3000 நபர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.*

*இந்நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதிகள் வி.விஜயன் ஆர்.சேகர். மாமன்ற உறுப்பினர் ச.சங்கர்கணேஷ், செ.ராமையா, ம.சிவா, கே.முரளி, கு.விமலா, வி.பன்னீர்செல்வம், கோ.கண்ணதாசன், ஆர்.முரளிகிருஷ்ணன், ப. சரவணன், மோ.சுந்தர், கே.குமார், ஈ.பிரசாந்த், பூத்தப்பேடு, ரகு, லோகேந்திர பாபு, சீனு, என்.துரை, ஆட்டோ கிருஷ்ணன், தங்கராஜ். பி.இளங்கோவன், கே.தீபன்,வி.பாலு, பாக்சர் செந்தில்குமார், சின்னையா, ரங்கன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

# ராமர் கோயில் திறப்பு விழா புறக்கணிப்பு !

## காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அறிவிப்பு!

புதுடெல்லி, ஜன.12–

ராமர் கோயில் திறப்பு விழாவை புறக்கணிப்பதாககாங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அடுத்தடுத்து அறிவித்துள்ளன.

உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியில் வரும் 22ம் தேதி நடக்கும் ராமர் கோயில் திறப்பு விழா, ஆன்மிக விழா அல்ல என்றும் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். ஏற்பாடு செய்துள்ள அரசியல் விழா என்று காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

கட்டுமானப் பணி முழுமையாக முடியாத நிலையில், ஆர்.எஸ்.எஸ். மற்றும் பா.ஜ.க. தலைவர்கள், தேர்தல் ஆதாயத்துக்காக அவசரமாக ராமர் கோயில் திறப்பு விழாவை நடத்துவதாக காங்கிரஸ் கூறியுள்ளது.

ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. நிகழ்ச்சி என தெளிவாக தெரிவதால், மல்லிகார்ஜுன கார்கே, சோனியா காந்தி, ஆதிர் ரஞ்சன் சவுத்ரி ஆகியோர் பங்கேற்க மாட்டார்கள் என்று காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

மார்க்சிஸ்ட் கட்சியும் திறப்பு விழாவை புறக்கணித்துள்ளது.

ராமர் கோயில் திறப்பு விழா அரசியல் நாடகம் என மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி விமர்சித்துள்ளார்.

இதேபோல், விஷ்வ இந்து பரிஷத் அமைப்பின் செயல் தலைவர் அலோக் குமார் விடுத்த அழைப்பை சமாஜ்வாதி தலைவரும், உத்தரப்பிரதேச முன்னாள் முதலமைச்சருமான அகிலேஷ் யாதவ் நிராகரித்துள்ளார். அழைப்பிதழே வரவில்லை என ஆம் ஆத்மி மற்றும் தேசியவாத காங்கிரஸ் கட்சிகள் தெரிவித்துள்ளன. ராமர் பா.ஜ.க.வுக்கு மட்டும் சொந்தம் இல்லை என உத்தவ் தாக்கரேவின் சிவசேனா விமர்சித்துள்ளது.

### எழும்பூர் தொகுதி வார்டு 99-ல்

# மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாம்!

## இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. ஆய்வு!

*சென்னை,ஜன.12-*

*எழும்பூர் தொகுதி, வார்டு எண்.99, புரசைவாக்கம், சுந்தரம் தெருவிலுள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாமை தி.மு.கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும், எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் பார்வையிட்டு, அம்முகாமில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் குறித்து அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தார்.*

*இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், மாவட்டப் பிரதிநிதி மா.காந்தி, மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் யு.விஜயபோஸ், கி.புஷ்பராஜ், கோமகன், பிரசாத், பாண்டியன், கோவிந்தன், வினோத், ஒ.கோட்டி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.*

### பொங்கல் பண்டிகை:

# சென்னை - கோவை இடையே சிறப்பு ரயில்!

## தெற்கு ரயில்வே அறிவிப்பு!

சென்னை, ஜன. 12 -

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சென்னை - கோவை இடையே சிறப்பு ரயில் இயக்கப்படும் என தெற்கு ரயில்வே அறிவித் துள்ளது. பொங்கல் பண்டி கையை சொந்த ஊர்களில் கொண்டாட செல்லும் பொதுமக்கள் வசதிக்காக சிறப்பு பஸ்கள், ரயில்கள் அறிவிக்கப்பட்டு உள்ளன.

இதுகுறித்து தெற்கு ரயில்வே வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

பொங்கல் பண்டிகை முன்னிட்டு பயணிகளின் வசதிக்காக சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது. அதன்படி சென்னை - கோவை - சென்னை இடையே சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது. அதன்படி ஜன.16, 17ம் தேதிகளில் கோயம்புத்தூரில் இருந்து தாம்பரத்திற்கு இயக்கப்படும் சூப்பர் பாஸ்ட் சிறப்பு ரயில் (எண்.06086) இரவு 8.45 மணிக்கு புறப்பட்டு மறுநாள் அதிகாலை 5.20 மணிக்கு தாம்பரம் வந்து சேருகிறது. தாம்பரத்தில் இருந்து 17, 18ம் தேதிகளில் இயக்கப்படும் சிறப்பு ரயில் காலை 7.30 மணிக்கு புறப்பட்டு மாலை 4.30 மணிக்கு கோயம்புத்தூர் சென்றடைகிறது.

